**<u>DEPOSITION OF WITNESS</u>**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 289/2023**
**Prosecution Witness - PW5**

| | |
|---|---|
| Name | : திரு. சிபி செபாஷ்டின் |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.01.2026.

(Accused absent. Petition U/s.355 BNSS is filed and allowed).

<u>முதல் விசாரணை</u>–

நான் கருங்கலில் வசிக்கிறேன். கண்ணாடி கடை வைத்திருக்கிறேன். கருங்கல் போலீசார் வந்து கார் கண்ணாடிக்கான பில்லை என்னிடம் கேட்டார்கள் அதனால் பில்லை கொடுத்தேன். வேறு விபரங்கள் எனக்கு நினைவில் இல்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை ( அரசு தரப்பில்)</u>

கடந்த 26.04.2022–ம் தேதி அன்று கருங்கல் காவல் நிலைய குற்ற எண்.134/2022 u/s. 294b, 353 IPC மற்றும் 3(1) TNPPDL Act வழக்கில், அரசுக்கு சொந்தமான TN 74 G 0529 பதிவெண் கொண்ட சுமோ விக்டா வாகனத்தில் முன் கண்ணாடி–1, பின் கண்ணாடி–1, கதவு கண்ணாடி– 2, Side கண்ணாடி –1 ஆகியவற்றை எதிரியால் உடைக்கப்பட்டதை சரி செய்ய வேண்டி எனது கடைக்கு கொண்டு வந்து மேற்படி வாகனத்தின் கண்ணாடிகள் மாட்டி சரி செய்து கொடுத்தேன். அதற்கான செலவு ரூ.15,200/– ஆனது என ரசீது வழங்கியதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு சாதகமாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**